அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 284

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7.
9 ஏப்ரல், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முழுச்சம்பள வெளிநாட்டுப் படிப்பு லீவும், வெளிநாட்டில் படிப்பதற்கான /தொழில்பார்ப்பதற்கான சம்பளமற்ற படிப்பு லீவும் சம்பந்தமான கடப்பாட்டுச் சேவைக்காலத்தை மீளாய்தல்**

1. <u>முழுச்சம்பளப் படிப்பு லீவு சம்பந்தமாக கடப்பாட்டுச் சேவைக்காலம்</u>

170-ஆம் இலக்கத்தையும் 18-12-1974 ஆம் திகதியையும் கொண்ட தாபன சுற்று நிருபத்தின் கீழ் முழுச்சம்பள வெளிநாட்டுப் படிப்பு லீவு சம்பந்தமான கடப்பாட்டுச் சேவைக் காலம் இத்தால் திருத்தப்படுகிறது. அரசாங்கச் செலவில் கடமை பேரில் கருத்தரங்கொன்றிற்கோ பயிற்சிநெறியொன்றிற்கோ, வெளிநாட்டுப் புலமைப் பரிசில் ஒன்று தொடர்பாகவோ வெளிநாடு செல்லும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் இந்நாட்டிற்கு வந்து கடப்பாட்டுச் சேவை புரிவதாகக் கீழ்க் காணுமாறு உடன்படிக்கையொன்றிற்கு இணங்குதல் வேண்டும்.

(1) தற்பொழுது உள்ளவாறு ஒரு மாதத்துக்கு அல்லது அதற்குக் குறைந்த காலத்துக்கு கடப்பாட்டுச் சேவைக் காலம் கிடையாது.

(11) ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலமானால் கடப்பாட்டுச் சேவைக் காலமானது குறைந்தது ஒரு வருடத்துக்கும் ஆகக் கூடியது 10 வருடங்களுக்கும் உட்பட்டதாக லீவுக் காலத்தைப் போல நான்கு மடங்காக அமைதல் வேண்டும்.

(111) கடப்பாட்டுச் சேவைக் காலமானது கிட்டிய முழு மாதத்துக்குக் கணக்கிடப்படுவதுடன் லீவுக் காலமானது குறைந்த பிரயாண காலத்தையும் உள்ளடக்கியதாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

2. <u>24-03-1980 ஆம் திகதியையும் 344-ஆம் இலக்கத்தையும் கொண்ட தாபன சுற்று நிருபத்தின் பிரகாரம் வெளிநாட்டில் படிப்பதற்கு/தொழில் பார்ப்பதற்கு வழங்கப்படும் சம்பளமற்ற லீவின் பேரிலான கடப்பாட்டுச் சேவைக் காலம்.</u>

ஓர் உத்தியோகத்தர் சம்பளமற்ற லீவைப் பெறும் சந்தர்ப்பத்தில் பூர்த்தி செய்துள்ள உறுதிப்படுத்தப்பட்டதும் ஓய்வூதிய உரித்துடையதுமான சேவையின் ஒவ்வொ முழு வருடத்துக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில் பின்வரும் நியதிகளுக்கமைய கடப்பாட்டுச் சேவைக் காலத்தைக் குறைக்க வேண்டும்.

(1) இந்தக் குறைப்பானது சம்பளமற்ற லீவு பெறப்படாத சேவை வருடங்களை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

(11) ஆகக் குறைந்த கடப்பாட்டுச் சேவைக்காலமானது ஒரு வருடமாக இருத்தல் வேண்டும்.

3. மேற்குறித்த கடப்பாட்டுச் சேவைக் காலங்கள் ஏலவே உத்தியோகத்தர்கள் இணங்கியுள்ள முறிகளுக்கும்/உடன்படிக்கைகளுக்கும் பொருந்தும்.

ஒப்பம்: டி. பி. ஐ. ப. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.